# NEWSLETTER

**September 2024**

VIVEKANANDA COMMUNITY FOUNDATION




**Contact Us !**

Main Road,Puthukudiyiruppu (30158), Batticaloa, Sri Lanka.

Phone : +94 653125555 | +94 777105569
WhatsApp / Viber: +94 77 677 0780

Email : vivekananda.cflk@gmail.com
www.vcf.lk

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569


## இரு மாணவிகளுக்கான துவிச்சக்கர வண்டிகள்







வறுமைக் கோட்டிற்குக் கீழான பிரதேசங்களில் வாழும் மாணவர்களின் கல்விக்கு வறுமை ஒரு தடையாகி விடக்கூடாது என்பதற்காக மாணவர்களின் மாற்றத்திற்கான வலுவூட்டல் என்னும் திட்டத்தினூடாக எம்மால் பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. அதனடிப்படையில் எம்மால் பொறுப்பெடுக்கப்பட்டு மாதாந்தம் ஊக்குவிப்புத் தொகை பெற்றுக்கொள்ளும் இரு மாணவர்களுக்கான துவிச்சக்கரவண்டி வழங்கப்படும் நிகழ்வானது விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் கொம்மாதுறை கிளையில் 01.09.2024 அன்று இடம்பெற்றதோடு விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் திட்டமுகாமையாளரால் அதற்கான ஆவணங்களும் கைச்சாத்திடப்பட்டு வழங்கிவைக்கப்பட்டது. செங்கலடி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கொடுவாமடு கிராமத்தைச் சேர்ந்த செல்வி.மகேஸ்வரன் நீர்த்தனா மற்றும் கொம்மாதுறையைச் சேர்ந்த செல்வி.டினோஜன் லக்சனா ஆகிய இரு மாணவர்களும் தமக்கான துவிச்சக்கரவண்டிகளைப் பெற்றுக்கொண்டனர். அந்த வகையில், எமது பயனாளிகள் இருவருக்கான நன்கொடை அனுசரணையை எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையினூடாக **நியூசிலாந்து நாட்டில் வசிக்கும் திருமதி.கணேசராணி ரவீந்திரன் அவர்கள்** வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது..

## 82 மாணவர்களுக்கான தண்ணீர்ப்போத்தல்கள்

ஆலங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் முதன் முதலாக பரிசளிப்பு விழாவினை நடாத்தவிருப்பதனால் பங்குபற்றும் மாணவர்களுக்கு சில்வர் தண்ணீர் போத்தலை பரிசாகக் கொடுப்பதற்காக எமது அறக்கட்டளையிடம் அவர்கள் கோரிக்கை விடுத்திருந்தமைக்கு அமைவாக எமது அறக்கட்டளையினரால் மேற்கொள்ளப்பட்ட களவிஜயத்தை அடுத்து அவர்களின் கோரிக்கைக்கு அமைய ஆரம்பப்பிரிவு மாணவர்கள் 82 பேருக்கான தண்ணீர் போத்தல்கள் பாடசாலை ஆசிரியரிடம் 02.09.2024 அன்று கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வானது எமது விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியில் இடம்பெற்றதோடு எமது அறக்கட்டளையின் நிறைவேற்றுப் பணிப்பாளர், திட்டமுகாமையாளருட்பட சேவையாளர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். இச்செயற்பாட்டிற்காக எமது அறக்கட்டளையினூடாக **இலண்டனில் வசிக்கும் திரு.சிவசுமித்திரன் விசுவநாதர் அவர்கள்** தமது நிதி அனுசரணையை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# வாழ்வியல் மாணவர்களுக்கானதோர் மேடை




இளைஞர்களின் மாற்றத்திற்கான வலுவூட்டல் எனும் தொனிப்பொருளில் பல்கலைக்கழக வாய்ப்பினை தவறவிட்ட, க.பொ.த உயர்தரம், சாதாரணதரம் சித்தியடையாத மாணவர்கள் வழிதவறிவிடாமல் அவர்களிற்கும் ஒரு வழி இருக்கின்றது என்பதனை உணர்த்தும் வாழ்வியலும் வழிகாட்டலும் என்னும் விசேட பயிற்சியினை வடிவமைத்து வருடாந்தம் இதன் மூலம் 600 வழி தெரியாமல் திண்டாடும் இளைஞர், யுவதிகளுக்கான வழிகாட்டலை மேற்கொள்ளும் வகையிலான எமது திட்டத்தின் ஒரு பிரதான செயற்பாடாக மட்டக்களப்பு புதுக்குடியிருப்பில் விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியில் வாழ்வியல் திறன் மேம்பாட்டு பயிற்சி பெற்ற இவ்வருட முதலாம் தொகுதி மாணவர்களின் பயிற்சி அடைவின் இறுதி நாள் காட்சிப்படுத்தல் நிகழ்வு 10.09.2024 மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.










இந்நிகழ்விற்கு ஆரையம்பதி பிரதேச செயலக மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர், திறன்விருத்தி உத்தியோகத்தர், இளைஞர் சேவை அதிகாரி, கிராம சேவை உத்தியோகத்தர் உள்ளிட்ட எமது விவேகானந்த குடும்பத்தின் சேவையாளர்களும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். மாணவர்களின் வெளிக்களச் செயற்பாடுகள் தொடர்பான காட்சிப்படுத்தலைத் தொடர்ந்து வாழ்க்கை திறன் பயிற்சியினால் அவர்களது வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பிலான தனிப்பட்ட அனுபவப் பகிர்வும் இடம்பெற்றது. இம்மாணவர்களுக்கான வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு பயிற்சியானது விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியில் பயிற்சிக்கு பொறுப்பாக இருந்த கல்லூரியின் பயிற்சி உத்தியோகத்தர், வளவாளர் திரு.சார்ள்ஸ் கிரேசியன் அவர்கள் பயிற்சியை சிறப்பாக வடிவமைத்து நடைமுறைப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.






# Top news

## இன்றைய விதைகள்




United board of Christian Higher Education in Asia இன் ஒருங்கிணைப்பினூடாக இந்திய சமுதாய கல்லூரிகள் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையத்தினால் (ICRDCE) மட்டக்களப்பிலிருந்து 3 தொழிற்பயிற்சி நிலையங்கள் தெரிவு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட சமுதாய கல்லூரி முறைமை மற்றும் வாழ்வியல் பயிற்றுவிக்கும் 2 வாரகால TOT பயிற்சி பட்டறைக்கு எமது விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் சேவையாளர்கள் கடந்த வருடம் செப்ரம்பர் மாதம் இந்தியா சென்று வாழ்க்கைத் திறன் பயிற்சியைப் பெற்றிருந்தனர்.









அதன் தொடர்ச்சியாக எமக்கான பயிற்சி வழங்கிய ICRDCE மற்றும் அதற்கான நிதியுதவியினை வழங்கிய United board நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் எமது கல்லூரியின் செயற்பாடுகளை பார்வையிட வருகைதந்திருந்தனர். அவர்களின் வருகையின் போது ஆரையம்பதி பிரதேசத்தில் அமைந்துள்ள புகலிடத்தில் உள்ள விசேட தேவையுடைய சிறுவர்களிற்காக புகலிடம் சமுதாய கல்லூரி திறந்து வைக்கப்பட்டதோடு அச்சிறுவர்களிற்கான விசேட பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டது. அதன் அடுத்த கட்டமாக எமது கல்லூரி மாணவர்களுக்கு வாழ்க்கைத்திறன் பயிற்சியைப் பாடநெறியாக வடிவமைத்து வழங்கியதைத் தொடர்ந்து விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரி, புதுக்குடியிருப்பு மற்றும் கொம்மாதுறை உள்ளடங்கலாக 3 தொகுதி மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு 25.09.2024 அன்று இடம்பெற்றது.

அமெரிக்காவின் United Board நிறுவனத்திலிருந்து வருகை தந்த குழுவினர், ICRDCE நிறுவனத்தினர், மியானி தொழிநுட்பவியல் கல்லூரி மற்றும் பரியோவான் சென்ஜோன்ஸ் கல்லூரி ஆகியோர் கலந்து சிறப்பித்ததோடு மாணவர்களுக்கான சான்றிதழ்களையும் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது. இதன் போது ICRDCE குழுவினரால் எமது நிறைவேற்றுப் பணிப்பாளர் கௌரவிக்கப்பட்டதோடு எமது விவேகானந்த குடும்பத்தின் சார்பாக அவர்களுக்கான நினைவுச்சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டது.















60 இற்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் தமக்கான சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டதோடு மட்டுமல்லாமல் வாழ்க்கைத்திறன் பயிற்சியால் அவர்களது வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களையும் அவர்களது எதிர்கால இலட்சியங்களையும் உள்ளடக்கியதாக அவர்களது அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டமை அனைவருக்கும் இந்த பயிற்சியின் முக்கியத்துவத்தினை உணர்த்தியது. தடம்மாறி செல்லும் ஒவ்வொரு இளைஞனின் வாழ்விலும் வாழ்க்கைத்திறன் விதைக்கப்படுகையில் இன்றளவில் வாழ்வியலால் ஏற்படுத்தப்படும் தனி மனித மாற்றமானது நாளைய சமுதாய மாற்றமாக விரிவடைந்து செல்லும் என்பதில் சிறிதும் மாற்றமில்லை. இளைஞர்கள் பயன்படாதவர்கள் அல்ல, அவர்கள் பயன்படுத்தப்படாதவர்கள். வழிதவறிப்போகும் எம் இளைய தலைமுறையினருக்கு அவர்களின் வாழ்வினை உணர்த்திடும் இப்பயிற்சியின் விசேட தன்மை அதனை அவர்கள் பயிற்சியினை பூர்த்தி செய்த பின்னரே உணர்கின்றனர்.












## இந்திய குழுவினருடனான சந்திப்பு



அமெரிக்காவின் United Board நிறுவனத்திலிருந்து வருகை தந்த குழுவினர் மற்றும் ICRDCE நிறுவனத்தினரின் தலைமையிலான கலந்துரையாடல் 26.09.2024 அன்று மியானி தொழிநுட்பவியல் கல்லூரியில் ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் எமது விவேகானந்த தொழிநுட்பவியல் கல்லூரி, மியானி தொழிநுட்பக் கல்லூரி மற்றும் பரியோவான் சென்ஜோன்ஸ் கல்லூரியின் வாழ்க்கைத்திறன் பயிற்சி பெற்ற சேவையாளர்கள் கலந்து சிறப்பித்ததோடு எதிர்வரும் காலங்களில் நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்ற செயற்பாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

## மாதம் ஒரு களம்



மனித நேயநம்பிக்கை நிதியத்தின் நிதி உதவியுடன் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் ஒருங்கிணைப்பினூடாக விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற Office management & IT இரண்டாவது தொகுதி மாணவர்களின் பெற்றோருடனான கலந்துரையாடல் விவேகானந்த தொழிநுட்பவியல் கல்லூரி கொம்மாதுறை கிளையில் நடைபெற்றது. கல்லூரியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு.க.பிரதீஸ்வரன் அவர்கள் மற்றும் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் முகாமையாளர் திரு.ராஜு கபீரியல் அவர்களினால் நடாத்தப்பட்ட இக் கலந்துரையாடலில் இப் பயிற்சியின் நோக்கம் மற்றும் அதன் முக்கியத்துவம் தொடர்பான விளக்கத்தைத் தொடர்ந்து அடிப்படையான கணினி அறிவினை வழங்கிடும் நோக்கிலே இந்த பயிற்சி வடிவமைக்கப்பட்டுள்ளமை தெளிவூட்டப்பட்டது.

## மாணவிகளுக்கான வாழ்வியல் பயிற்சி

எமது வாழ்க்கைத்திறன் பயிற்சி பெற்ற சேவையாளர் குழாத்தினரின் TOT பயிற்சியின் அடுத்த கட்ட நடவடிக்கையாக பழுகாமத்தில் அமைந்துள்ள திலகவதியார் இல்லத்தில் கல்வி பயிலும் தரம் 9 மாணவிகளுக்கு வாழ்க்கைத்திறன் ஒருநாள் செயலமர்வு 14.09.2024 அன்று இடம்பெற்றது. சமாளிக்கும் திறன்கள் (கோபம், பயம், வெட்கம்) எனும் தலைப்பில் இம் மாணவிகளுக்கான செயலமர்வு நடாத்தப்பட்டதோடு சமாளிக்கும் திறன்களின் அவசியம் பற்றியும் அதனால் ஒவ்வொரு மாணவியின் வாழ்விலும் ஏற்படவேண்டிய மாற்றங்கள் பற்றியும் தெளிவூட்டப்பட்டது.

**இவ்வாறான செயலமர்வுகளை நடாத்துவதன் மூலம் இன்றைய மாணவ சமுதாயத்தினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு மாத்திரமின்றி முறையான சமுதாயத்தை உருவாக்க முடியும். ஆகையால் நீங்களும் உங்களால் முடிந்த பங்களிப்பை மேற்கொள்வதன் மூலம் எம்முடன் இணைந்திடுங்கள்**





## சேவையாளர்களுக்கான மாதாந்த பயிற்சி

எமது விவேகானந்த குடும்பத்தின் சேவையாளர்களுக்கான மாதாந்த கருத்தரங்கு 17.09.2024 அன்று நடாத்தப்பட்டது. திரு.அ.ஜெகநாதன் அவர்கள் வளவாளராகக் கலந்துகொண்டதோடு மனிதனின் மனதின் 3 வகையான குணங்கள் பற்றிய தெளிவூட்டலை அடுத்து குழு மேம்பாடு தொடர்பிலான சலந்துரையாடலும் சிறு செயற்பாடுகளூடாக மேற்கொள்ளப்பட்டது.



## 125 பாலர் பாடசாலை சிறுவர்களுக்கான சீருடைகள்

எமது ‘சிறுவர்களின் மாற்றத்திற்கான வலுவூட்டல்’ எனும் திட்டத்தினுள் அடங்கும் 5 பாலர் பாடசாலைகளில் கல்வி பயிலும் 125 சிறுவர்களுக்கான சீருடைகள் எமது நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் கள சேவையாளர்களால் வழங்கிவைக்கப்பட்டது. எமது பாலர் பாடசாலைகளும் இச் செயற்பாட்டிற்காக எமது அறக்கட்டளையினூடாக தமது நிதி அனுசரணையை வழங்கிய எமது அறக்கட்டளை உறவுகளும் வருமாறு

- திருநீற்றுக்கேணி நலன்புரி பாலர் பாடசாலை, ஆரையம்பதி – திரு.திருமதி.மனோகரி நல்லதம்பி குடும்பம், அமெரிக்கா
- கௌரி பாலர் பாடசாலை, கிரான் – திரு.செந்தில்குமாரன், அமெரிக்கா
- விபுலானந்தா பாலர் பாடசாலை, பலாச்சோலை – திரு.இ.ஏகாம்பரம், கனடா
- மாணிக்கப் பிள்ளையார் பாலர் பாடசாலை, புலிபாஞ்சகல் – சிவசுந்தரம், இலண்டன்
- சக்தி பாலர் பாடசாலை, வந்தாறுமூலை – திரு.முருகேசு விசாகன், கனடா

## நான்கு மாணவர்களுக்கான வினாத்தாள் புத்தகங்கள்

எமது அறக்கட்டளையானது மாணவர்களின் மாற்றத்திற்கான செயற்பாடுகளுடாகத் தேவைப்பாடுடைய மாணவர்களைப் பொறுப்பெடுத்து அவர்களுக்கான மாதாந்த ஊக்குவிப்புத்தொகை மற்றும் மாணவர்களுக்குரிய தேவையின் நிமித்தம் அவர்களுக்கான உதவிகள் போன்றவற்றை வழங்கி வருகின்றது. அதனடிப்படையில் எமது திட்டத்தில் உள்வாங்கப்பட்டு எம்மால் பொறுப்பெடுக்கப்பட்ட, உயர்தரம் பயிலும் 4 மாணவர்களின் கோரிக்கைக்கமைவாக அவர்களுக்கான கடந்த கால வினாத்தாள் பயிற்சிப் புத்தகங்கள் 18.09.2024 அன்று வழங்கி வைக்கப்பட்டது. எமது அறக்கட்டளையின் கள சேவையாளர்களால் முன்னெடுக்கப்பட்டிருந்த இச்செயற்பாட்டிற்கு **சுவிட்சர்லாந்து நாட்டைச்சேர்ந்த திரு.காந்தருபன் அவர்கள்** அனுசரணையை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




## பல்கலைக்கழக மாணவர்களுக்கான சீருடைகள்

தேசிய ரீதியாக பல்கலைக்கழகங்களிடையே நடைபெறும் வலைப்பந்து போட்டியில் பங்குபற்றும் மாணவ மாணவிகளுக்கான சீருடைகளுக்கான கோரிக்கைக்கமைவாக எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையினூடாக எமது கிழக்கு பல்கலைக்கழக வலைப்பந்தாட்டக் குழு மாணவர்களுக்கான சீருடைகள் 12.09.2024 அன்று எமது விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியில் வழங்கி வைக்கப்பட்டது. அதனடிப்படையிலே எமது கோரிக்கையினை ஏற்று இச்செயற்பாட்டிற்காக கனடாவில் வசிக்கும் திரு.இ.ஏகாம்பரம் அவர்கள் நிதி அனுசரணையை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



### ஆங்கில வகுப்புக்கள்

கோவில்குளம் கிராமத்தில் அடிப்படைத் தேவையாக உள்ள கல்வி, கலாச்சார, பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கில், எமது அறக்கட்டளையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுத்தலைத் தொடர்ந்து அவர்களுக்கான ஆங்கில வகுப்புக்கள் 15.09.2024 அன்று ஆரம்பிக்கப்பட்டது. கிராமத்தில் காணப்படும் அடிப்படைத் தேவைப்பாடாகக் காணப்படும் ஆங்கிலத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இச் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.





### பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

எமது 'சிறுவர்களின் மாற்றத்திற்கான வலுவூட்டல்' எனும் திட்டத்தினுள் அடங்கும் 5 பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான இந்த மாதத்திற்குரிய கலந்துரையாடல் எமது அறக்கட்டளையின் திட்டமுகாமையாளரால் 09.09.2024 அன்று நடாத்தப்பட்டது. ஆரையம்பதி பிரதேசத்தில் அமைந்துள்ள நலன்புரி பாலர் பாடசாலையில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது. பாலர் பாடசாலைகளுடனான எமது அறக்கட்டளையின் செயற்பாடுகள் தொடர்பில் ஆலோசிக்கப்பட்டதோடு புரட்டாதி மாதத்திற்கான அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டது.

### இளைஞர் அணியின் சிரமதானப்பணி

விசேட தேவையுடைய மாணவர்களுக்கான புகலிடத்தில் எமது விவேகானந்த இளைஞர் அணியினரால் சிரமதானப் பணி 18.09.2024 அன்று முன்னெடுக்கப்பட்டதோடு எமது இளைஞர் அணியின் உறுப்பினர்களும் இச்செயற்பாட்டில் கலந்துகொண்டனர்.






### சுற்றாடல் கழக மாணவர்களுக்கான பங்களிப்பு

எமது அறக்கட்டணையின் பசுமைப்புரட்சித் திட்டத்தினூடாக சுற்றாடல் முன்னோடிப் படையணி மாணவர்களுடன் இணைந்து அவர்களுக்கான பங்களிப்பை நாம் மேற்கொண்டு வருகின்றோம். அந்த வகையில் சுற்றாடல் முன்னோடிப் படையணி மாணவர்களின் தனிப்பட்ட திட்டச்செயற்பாட்டின் ஆவணப்படுத்தல் நிகழ்வு 27.09.2024 அன்று எமது கல்லூரியில் இடம்பெற்றது.

















புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலத்தில் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கான ஒருநாள் வாழ்க்கைத்திறன் செயலமர்வு 27.09.2024 அன்று எமது கல்லூரியில் இடம்பெற்றது. தரம் 10 ஐச் சேர்ந்த 40 இற்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளுக்குரிய நேர்மறை எண்ணங்கள் தொடர்பிலான செயலமர்வாக இடம்பெற்றது.

அவர்கள் எமது கல்லுரியைப் பார்வையிட்டதோடு மட்டுமன்றி அம்மாணவர்களுக்கு தொழிநுட்ப உலகின் பரிமாண வளர்சி பற்றியும் அது மாணவர்களின் கல்வியில் ஏற்படுத்தும் மாற்றங்கள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டதோடு எமது விவேகானந்த தொழிநுட்பவியல் கல்லூரியில் நடைபெறும் பயிற்சிநெறிகள் பற்றியும் தெளிவூட்டப்பட்டது.









## Donation – Request details

**Annai Sri Sarada Center**

**Special Meal per Day - LKR 40,000**

**Sponsor a Pre-School**

**per Month - LKR 65,000**

**Nutritious Food per Child - LKR 3,000**

**Jeevananda Girls Home**

**Special Meal per Day - LKR 20,000**

**Nandavanam Elders Home**

**Special Meal per Day - LKR 15,000**

**Sponsor a Youth**

**per Technician - LKR 10,000**

**Sponsor a Student**

**per Month - LKR 3,500**

**Nutrion Pack for Pugalidam Disables Center**

**per Pack - LKR 3,500**

**Education Materials For School students**

**per Pack - LKR 5,000**

விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் மாதாந்தம் விசேட உணவு வழங்குதலை முன்னெடுத்து வருகின்றது. அதனடிப்படையில் புரட்டாதி மாதத்திற்கான விசேட உணவு வழங்கப்பட்டது.



இவ்வாறு எமது சிறுவர் இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு நீங்களும் உங்களால் முடிந்த உதவியை வழங்குவதன் மூலம் எமது சமூக வலுவூட்டலில் பங்களிப்பை மேற்கொள்ளலாம்.

மேலதிக தகவல்களுக்கு

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569

- அன்னை ஸ்ரீ சாரதா நிலையம்
- மயிலம்பாவெளி வாழும்கலை நம்பிக்கை நிதியம்
- நந்தவனம் முதியோர் இல்லம்





